# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 29 வியாழக்கிழமை 16.05.2024 கதிர் 259







# தமிழ்த் தலைமைகள் பிளவுபடாத சமூகமாக ஒன்றிணைய வேண்டும்! அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியதாக சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்

## தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாம்!

**தமிழ்த் தலைமைகள் பிளவுபடாத சமூகமாக ஒன்றிணைய வேண்டும்! என அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

**நேற்றைய தினம் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், தனது வடக்குக்கான விஜயத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரை யாழ்ப்பாணத்தில் சந்தித்திருந்தார்.**

**குறித்த சந்திப்பு தொடர்பாக கிளிநொச்சியில் இன்று நடாத்திய ஊடகச் சந்திப்பிலேயே தமிழ்த் தலைமைகள் பிளவுபடாத சமூகமாக ஒன்றிணைய வேண்டும்!, என அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியிருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.** 2➤






# தோட்ட மக்கள் மீதான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்!

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அப்பாவித் தோட்ட மக்களை அவ்வப்போது பல்வேறு காரணங்களுக்காகத் தோட்ட நிர்வாகம் உள்ளிட்ட வெளியார் தாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இரத்தினபுரி நகரிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் இன்று காலை 10 மணி முதல் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மலையக சிவில் உரிமைக்கான இயக்கம் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கத்தினர், தோட்டத் தொழிலாளர்கள், தொழிற்சங்கவாதிகள் அரசியல்வாதிகள் உள்ளிட்ட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இரத்தினபுரி, தும்பரை 82 ஆவது தோட்டத்தில் அண்மையில் கடமைக்கு வர மறுத்த பெண் தோட்டத் தொழிலாளி 2➤

# இலங்கை அரசிடமிருந்து எந்த நீதியையும் நாம் பெற முடியாது என்பதையே அண்மைய சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன!

## யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கவலை

பல தசாப்தங்களாகத் தமிழ் மக்கள் அனுபவித்த இன ஒடுக்குமுறை மற்றும் இன வன்முறைக்கு இலங்கை அரசின் சட்ட மற்றும் நீதித்துறைக் கட்டமைப்புகளிடம் இருந்து எந்த நீதியையும் பெற முடியாது என்ற தமிழ் சமூகத்தின் நீண்டகாலப் பார்வையினை உறுதிப்படுத்தும் சம்பவங்கள் அரங்கேறுகின்றன, என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வடக்குக் கிழக்கில் இறுதிப் போர் நினைவேந்தல் மீதான அரச அடக்குமுறை குறித்த யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், இலங்கையில் ஆயுத மோதல் முடிவுக்கு வந்து பதினைந்து ஆண்டுகள் கடந்தும், உள்நாட்டுப் போரினால் ஏற்பட்ட கூட்டு வலி மற்றும் அதிர்ச்சியில் இருந்து தமிழ் மக்கள் இன்னமும் முழுமையாக மீளவில்லை. முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டமையுடன் போர் முடிவுக்கு வந்தது. மேலும் ஆயிரக்கணக்கானோர் இந்தப் போரிலே காயமடைந்தனர். பலர் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது இன்னமும் தெரியவில்லை.

தமிழ் மக்கள் இந்த யுத்தத்தின் போது சந்தித்த பாரிய பொருள் இழப்பின் தாக்கமானது நீண்ட கால விளைவுகளைக் கொண்டது. உள்நாட்டுப் போரின்போது தாங்கள் சந்தித்த மனித, உடல் மற்றும் பொருள்ரீதியான இழப்புகள் குறித்து உண்மையையும், நீதியையும் தமிழ் மக்கள் இன்று கோரி நிற்கின்ற அதேவேளை, போரின் கடைசிக் கட்டங்களின் போது இலங்கை அரசு செய்த அட்டூழியங்களை ஓர் இனவழிப்புச் செயன்முறை என அவர்கள் கருதுகிறார்கள்.

கடந்த பதினான்கு ஆண்டுகளில் நடந்ததைப் போலவே, இந்த ஆண்டிலும் மே மாதத்திலே வடக்குக் கிழக்கிலும் அதற்கு அப்பாலும் உள்ள தமிழர்கள் போரின் போது இறந்தவர்களை நினைவுகூர்கின்றனர். வடக்குக் கிழக்கு முழுவதும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. முள்ளிவாய்க்கால் வன்முறையை நேரில் அனுபவித்தவர்கள் உள்ளடங்கலாக தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்களால் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

போரில் இறந்த தங்கள் உறவுகளையும், இழப்புக் களைச் சந்தித்த பரந்துபட்ட தமிழ் சமூகத்தையும் நினைவுகூருவோரும் அனைவருடனும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தோளோடு தோள் நின்று அவர்களுக்கு எமது ஆதரவினை வழங்குகிறோம். அவர்களின் துயரத்திலும் 2➤

# எம்.பி. க்களுக்கு வாகன அனுமதி வழங்குவதனை எதிர்த்து ஜனாதிபதி செயலகம் முன் ஆர்ப்பாட்டம்!

## உணவின்றி, மின்சாரம், நீர்க் கட்டணம் செலுத்த முடியாத நிலையில் இருக்கையில் இது தேவையா? எனவும் கேள்வி

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன அனுமதிப்பத்திரத்தை மீண்டும் வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, இலஞ்சம், ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான மக்கள் சக்தி அமைப்பு ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக நேற்று கவனயீர்ப்பு 2➤



# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாகனங்கள் வழங்குங்கள்! மக்கள் சேவை செய்யும் நல்லவர்களும் இவர்களில் உள்ளனர்

## அனைத்து எம்.பி. க்களும் திருடர்கள் அல்ல எனவும் கூறுகிறார் ஹர்ஷ எம்.பி.

நாடாளுமன்றத்திலுள்ள அனைத்து எம்.பி.க்களும் திருடர்கள் அல்ல, சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ பணிகளுக்காக வெகு தொலைவிலிருந்து கொழும்புக்கு வர வேண்டியிருப்பதால், அவ்வாறானவர்களுக்கு பயன்படுத்தக்கூடிய வாகனம் வழங்கப்பட வேண்டும் என, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

மக்கள் பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் இந்த வேளையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவது நியாயமல்ல என்ற போதிலும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமையின் நிமித்தம் அவ்வாறானவர்களுக்கு அரசாங்க வாகனங்களை வழங்குவது பொருத்தமானது எனவும் அவர் குறிப்பிட்டார். மொனராகலை, யாழ்ப்பாணம், பதுளை, திருகோணமலை என வெகுதொலைவிலிருந்து சிலர் நாடாளுமன்றம் வருகின்றனர், 2➤

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேதனையிலும் நாமும் பங்கேற்கிறது.

நினைவுகூரல் செயன்முறைகள் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குணப்படுத்தலினை ஏற்படுத்துவதிலும், அவர்கள் வாழ்விலே அமைதியைக் கொண்டுவருவதிலும்பங்களிக்கக்கூடியனவாக இருக்கும் அதேவேளை, பாதிக்கப்பட்டவர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டு எதிர்ப்பினையும், வன்முறைக்குப் பின்னான அம்மக்களின் மீளெழுச்சியினை வெளிப்படுத்தும் செயன்முறைகளாகவும் அமைகின்றன என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கருதுகிறது.

அதேவேளை, இலங்கை அரசு மற்றும் அதன் சட்ட அமுலாக்க இயந்திரங்கள் இந்த வாரம் நடைபெற்று வரும் நினைவேந்தல் நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துவது, அடக்குவது மற்றும் தடுப்பது குறித்துத் தனது ஆழ்ந்த கரிசனையினையும், கவலையினையும் ஆசிரியர் சங்கம் இந்த அறிக்கையூடாக வெளிப்படுத்துகிறது.

2009ஆம் ஆண்டிலே முள்ளிவாய்க்காலிலே போரிலே அகப்பட்டிருந்த மக்களின் அனுபவங்களை நினைவுகூரும் வகையில், திருகோணமலை மாவட்டத்தின் சம்பூரிலே முள்ளிவாய்க்கால் கஞ்சியை விநியோகித்தவர்கள் கைது செய்யப்பட்டமையை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. இதே போல, மட்டக்களப்பு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகத்தைப் பொலிஸார் தடுக்க முயன்றுள்ளனர். இறந்தவர்களின் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான முகாம்களை நிறுத்துவதற்கான முயற்சிகளும் கூட இடம்பெற்றிருக்கின்றன.

கல்முனைப் பகுதியில் நினைவேந்தற் செயன்முறைகளைத் தடுக்கும் வகையில் நீதிமன்ற உத்தரவினைப் பொலிஸார் பெற்றுள்ளனர். இந்த சம்பவங்களைத் தவிர, சமூகக் கூட்டிணைவுடன் முன்னெடுக்கப்படும் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை, விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், பயங்கரவாதத்திற்கும் புத்துயிர் அளிக்கும் முயற்சிகள் எனத் தவறாக சித்தரித்து, இழிவுபடுத்தும் கொடிய செயலிலும் அரசும் அதன் இயந்திரங்களும் ஈடுபட்டுள்ளன.

நினைவுகூரலினைத் தடுப்பதற்கான அரசின் இந்த முயற்சிகள் அனைத்தும் போரில் இறந்தவர்களை அர்த்தமுள்ள முறையில் நினைவுகூருவதற்கு இலங்கையிலே தமிழர்களுக்கு இடமில்லை என்பதனையே எடுத்துக்காட்டுகின்றன. அரசின் இவ்வாறான கடும்போக்கான நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிராகத் தொடரும் அரசின் இன விரோதத்தையும் வெளிக்காட்டுகின்றன.

பல தசாப்தங்களாகத் தமிழ் மக்கள் அனுபவித்த இன ஒடுக்குமுறை மற்றும் இன வன்முறைக்கு இலங்கை அரசின் சட்ட மற்றும் நீதித்துறைக் கட்டமைப்புகளிடம் இருந்து எந்த நீதியையும் பெற முடியாது என்ற தமிழ் சமூகத்தின் நீண்டகாலப் பார்வையினை இந்தச் சம்பவங்கள் மீண்டும் உறுதிப்படுத்துவனவாக அமைகின்றன.

தமிழ் சமூகத்தின் நினைவேந்தல் முயற்சிகளை தவறாக சித்தரிக்கும் வகையிலும், அவற்றினை மட்டுப்படுத்தும் வகையிலும், அவற்றினைக் குற்றமாக மாற்றும் வகையிலும் அரச இயந்திரங்களினால் மேற்கொள்ளப்படும் எல்லா செயன்முறைகளையும் உடனடியாக நிறுத்துமாறு இலங்கையில் சட்ட அமுலாக்கத்துக்குப் பொறுப்பான அனைத்துத் தரப்புக்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோருகிறது.

இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் இன, மத வேறுபாடுகள் கடந்து நாட்டின் வடக்குக் கிழக்கிலே நினைவேந்தல் செயன்முறைகளினை நசுக்கும் வகையில்இடம்பெறும்அரச அடக்குமுறையை கண்டித்து, போரின்போது இறந்தவர்களின் குடும்பங்களுக்கும், இந்த வாரம் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துகொண்டிருப்போருக்கும் தங்கள் ஆதரவினை வழங்குமாறு நாம் கேட்டுக்கொள்கிறோம்.

போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் அனுபவித்த வேதனை மற்றும் இழப்புகளுக்கு நீதி கோரி நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்துகிறது - என்றுள்ளது. (O1)

## தமிழ் தலைமைகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து அவர் தகவல் தெரிவிக்கையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக இருந்த தமிழ்கட்சிகள் பிளவு பட்டு இருக்கின்றன. அதே போல் தமிழரசுக் கட்சிக்குள்ளும் நீதிமன்ற வழக்குக் காணப்படுகிறது.

இவ்வாறு தமிழ்க் கட்சிகள் பிளவுபடாது ஒன்றிணையும் போதே பலமாக இருக்க முடியும்!, என அமெரிக்க தூதுவர் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பொலிசார் பொதுமக்களைக் கைது செய்யும் விடயங்கள், தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான விடயங்கள் அந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (02,04)

## தோட்ட மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவரைத் தோட்ட நிர்வாகத்தினர் கடுமையாகத் தாக்கினர். சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் தொழிலாளி, இரத்தினபுரி பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார்.

தோட்ட நிர்வாகத்தினரின் அராஜக நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கோஷமிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், இது போன்ற விடயங்களுக்குப் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மலையக மக்கள் இந்த நாட்டின் அடிமைகள் இல்லை எனவும் தெரிவித்தனர்.

ஒரு மணித்தியாலம் வரை முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பட்டத்தின் பின்னர் தமது கோரிக்கைள் அடங்கிய மகஜரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரத்தினபுரி மாவட்ட செயலாளர், சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் கையளித்தனர்.

சிவில் அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் பெருமாள், ஜனநாயக மக்கள் முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எம்.சந்திரகுமார் உள்ளிட்டோர் உரையாற்றினர். (அ)

## எம்.பிக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டமொன்றை நடத்தியது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மகஜர் ஒன்றை வழங்குவதற்காக ஜனாதிபதி செயலகத்திற்குள் நுழைய முற்பட்டதையடுத்து பொலிஸார் அவர்களை கலைத்தனர். போராட்டம் துவங்கியதும், ஆர்ப்பாட்டக்காரர்களின் பதாதைகள் உள்ளிட்டவற்றை பொலிஸார் அகற்றினர். இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்குமிடையே கடும் வார்த்தைப் பிரயோகங்களும் நடந்தன. இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கபில முனசிங்கவிடம் மகஜரை கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த லஞ்சம், ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான மக்கள் அமைப்பின் தலைவர் ஜமுனி கமந்த துஷார, “நாடு திவாலாகி, மக்கள் பொருளாதாரப் படுகுழியில் இருக்கும்போது, உணவிற்கு வழியின்றி, மின்சாரக் கட்டணம், தண்ணீர் கட்டணம் செலுத்த முடியாமல் மக்கள் உள்ள நிலையில், லஞ்சமாக எம்.பி.க்களுக்கு வாகன உரிமம் கொடுக்கப் பார்க்கிறார்கள்.

எனவே, எம்.பி.க்களுக்கு வாகன உரிமம் வழங்கினால், ஜனாதிபதி மீது மக்களுக்கு ஓரளவேனும் நம்பிக்கை இருக்குமாயின், அந்த நம்பிக்கையும் பாதிக்கப்படும். அடுத்த தேர்தலில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட எம்.பி.க்கள் நிராகரிக்கப்படுவார்கள். எனவே, இந்த இறுதி நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகன அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டாம் என ஜனாதிபதியிடம் மகஜர் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளோம்” என்றார். (ரெம-65)

## நாடாளுமன்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருடர்கள் அல்லாத உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் உள்ளனர், எனவே அவ்வாறானவர்களையும் கவனத்திற் கொண்டு இது விடயத்தில் நியாயமான தீர்வொன்று காணப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

சில எம்.பி.க்கள் நாடாளுமன்றத்திற்கு சைக்கிளில் வந்து ஹெலிகொப்டரில் திரும்பிச் செல்கின்றனர், ஆனால் அவ்வாறானவர்களை போல் எல்லோருமே திருடர்கள் அல்ல, எனவே நேர்மையாக, நியாயமாக மக்கள்சேவை செய்யும்நாடாளுமன்ற உறுப்பினர்களை கவனத்திற் கொண்டு இதற்கு உரிய வழிவகைகளை செய்ய வேண்டும் எனவும் ஹர்ஷ டி சில்வா மேலும் தெரிவித்தார். (ரெம-64)

# பொலிஸ் உத்தியோகத்தர்களின் பொக்கெட் சோதனையிடப்படும்

## லஞ்சம் பெறுவதை தடுக்கும் திட்டம்




*சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் லஞ்சம் பெறும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக தமக்கு அறியக் கிடைத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது, எனவே அவர்கள் தத்தமது பொலிஸ் நிலையங்களிலிருந்து கடமைக்காக வெளியே செல்லும்போது, கடமைபதிவு புத்தகத்தில் தமது பணப்பையில் உள்ள பணத் தொகையை பதிவு செய்ய வேண்டும்என பணிக்கப்பட்டுள்ளதாகவும் தலை மையகம் குறிப்பிட்டுள்ளது.*

*அண்மைக் காலமாக சில பொலிஸ் உத்தியோகத்தர்களினால் லட்சக்கணக்கில் பணம் லஞ்சமாக பெறப்பட்டு வந்துள்ளதாகவும் இவ்வாறான செயற்பாடுகளை தடுக்கும் நோக்கிலேயே புதிய விதி முறைகள் அறிமுகப்படுத்துவதாகவும் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (ரெம-54)*



# சம்மாந்துறையில் இடம்பெற்ற திடீர்ப் பரிசோதனையில் பழங்களைப் பழுக்கவைக்கும் இரசாயங்களும் சிக்கின





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறையில் இடம்பெற்ற திடீர்ப் பரிசோதனைகளின்போது, பழங்களை விரைவாக பழுக்கப் பயன்படுத்தும் இரசாயனப் பதார்த்தமும் தெளிகருவிகளும் கைப்பற்றப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் சகீலா இஸ்ஸதீனின் பணிப்புரையின் பேரில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்த திடீர் சுகாதார பரிசோதனைப் நடைபெற்றது.

இதில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் தஸ்லிமா பஷீர், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் றயீஸ், இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் இஸ்மாயில் ஆகியோருடன் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் இணைந்து நடாத்திய உணவு நிலையப் பரிசோதனைகளில் சுமார் 67 நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பழங்களை விரைவாகப் பழுக்க வைக்கப் பயன்படுத்தும் இரசாயனப் பதார்த்தங்களும் தெளிகருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதன்போது மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களைத் தம் வசம் வைத்திருந்த 13 நிறுவனங்களில் இருந்து பெருமளவான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு, சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டன.

இதன்போது தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட 13 நிறுவனங்களுக்கு 105,000 ஷரூபா தண்டம் அறவிடப்பட்டது.

# பெரிய கல்லாறு ஸ்ரீ கடல்நாச்சி அம்மன் வருடாந்த திதிக்கான 1008 சங்காபிஷேகம்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

மட்டக்களப்பு பெரிய கல்லாறு ஸ்ரீ கடல்நாச்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த திதிக்கான 1008 சங்காபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பெரிய கல்லாற்றில் ஆரம்ப கால ஆலயங்களில் ஒன்றாக இருந்து கடந்த 500 ஆண்டுகளுக்கு மேலாக மெய்யடியார்களுக்கு தொடர்ச்சியாக அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கடல்நாச்சி அம்மனுக்கு யாகம், கும்பாபிஷேகம், 1008 சங்காபிஷேகம் என்பன பெருமளவு பக்தர்கள் புடைசூழ சிறப்பாக இடம்பெற்றன.






# மாவட்ட மட்ட மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழு அங்குரார்ப்பணம்





(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட சுய உதவி குழு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு இன்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட்ட குறித்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் இயங்கும் பிரதேச சுய உதவி குழுக்களை மையமாக வைத்து மாவட்ட சுய உதவிக் குழு புதிய நிருவாகத் தெரிவுடன் அங்குராரப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் உட்பட பல விடயங்களை எதிர்காலத்தில் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் த.பிரணவன், சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாற்றுத் திறனாளிகள், பெற்றார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ரி-20 தரவரிசையில் வனிந்து ஹஸரங்க முதலிடத்துக்கு முன்னேறினார்!




சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள புதிய ரி-20 சகலதுறை வீரர்கள் தரவரிசையில் இலங்கை அணியின் தலைவர் வனிந்து ஹஸரங்கவும் முதலிடம் பிடித்துள்ளார்.

228 மதிப்பீட்டுப் புள்ளிகளைப் பெற்று, பங்களாதேஷின் சகிப் அல் ஹஸனுடன் முதலிடத்தை வனிந்து ஹஸரங்க பகிர்ந்துக்கொண்டுள்ளார்.

ஸிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரில் பங்களாதேஷின் அனுபவ சகலதுறை வீரரான சகிப் அல் ஹஸன் விளையாடாததனால் அவருடைய மதிப்பீட்டு புள்ளிகள் குறைவடைந்துள்ளன. இதன் காரணமாக ஒரே மதிப்பீட்டுப் புள்ளிகளில் உள்ள ஹஸரங்க மற்றும் சகிப் அல் ஹஸன் ஆகிய இருவரும் முதலிடத்தை பகிர்ந்து கொண்டுள்ளனர்.

அதேநேரம் ஆப்கானிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் மொஹமட் நபி சகலதுறை வீரர்கள் வரிசையில் மூன்றாவது இடத்தையும், ஸிம்பாப்வே அணியின் சிக்கந்தர் ரஸா நான்காவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

தென்னாபிரிக்காவின் எய்டன் மர்க்ரம் மற்றும் அவுஸ்திரேலியாவின் மார்கஸ் ஸ்டொயினிஸ் ஆகியோர் ஒவ்வொரு இடம் பின்தள்ளி 5 மற்றும் 6வது இடங்களை பிடித்துள்ளனர். இந்த பட்டியலில் வனிந்து ஹஸரங்கவை தொடர்ந்து இலங்கை அணியின் தசுன் ஷானக 18வது இடத்தைப் பிடித்துள்ளார்.

சர்வதேச ரி-20 தரவரிசையின் துடுப்பாட்ட வரிசையில் இந்தியாவின் சூர்யகுமார் யாதவும் பந்துவீச்சில் இங்கிலாந்தின் அதில் ரஷீட்டும் முதலிடங்களைத் தக்கவைத்துள்ளனர். (04)

# ஈரானைநேர் செட்களில் வீழ்த்திய இலங்கைக் கரப்பந்தாட்ட அணி!



மத்திய ஆசிய கரப்பந்து சம்பியன்ஷிப் தொடரின் ஆரம்பச் சுற்றுப் போட்டியில், பலம் வாய்ந்த ஈரானுக்கு எதிராக நேற்று (15) நடைபெற்ற போட்டியில் 3-0 என்ற நேர் செட்கள் அடிப்படையில் இலங்கை அணி அபார வெற்றியைப் பெற்றுள்ளது.

சர்வதேச கரப்பந்தாட்டப் போட்டிகளின் வரலாற்றில் இலங்கை அணி முதல் தடவையாக ஈரான் அணியை வீழ்த்தியுள்ளமை மற்றுமொரு குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

போட்டியின் ஆரம்பம் முதலே எதிரணியான ஈரான் அணிக்கு பலத்த போட்டியைக் கொடுத்த இலங்கை அணி, போட்டியின் முதல் செட்டில் 25-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டை 25-17 எனவும், 3ஆவது செட்டை 25-21 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வெற்றி கொண்ட இலங்கை அணி, 3-0 நேர் செட்கள் அடிப்படையில் வெற்றியீட்டியது.

தற்போதைய உலகக் கரப்பந்தாட்ட தரவரிசையின்படி இலங்கை அணி 60 ஆவது இடத்தில் உள்ளது. இலங்கையிடம் தோல்வியடைந்த ஈரான் அணி 15ஆவது இடத்தில் உள்ளது. அதேபோல, ஆசிய தரவரிசையில் ஈரான் 2ஆவது இடத்திலும், இலங்கை 14ஆவது இடத்திலும் உள்ளன.

முன்னதாக கடந்த திங்கட்கிழமை (13) நடைபெற்ற போட்டியிலும் 3 நேர் செட்களில் (25 - 19, 25 - 20, 25 - 14) இலங்கை வெற்றி பெற்றிருந்தது. எவ்வாறாயினும் தனது முதல் இரண்டு போட்டிகளில் கிர்கிஸ்தானிடமும் பாகிஸ்தானிடமும் இலங்கை தோல்விகளைத் தழுவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபத்தில் நடைபெற்று வருகின்ற இந்தப் போட்டித் தொடரில் இலங்கை தனது கடைசிப் லீக் போட்டியில் துர்க்மேனிஸ்தானை இன்று (16) எதிர்த்தாடுகிறது.

6 அணிகள் பங்கேற்கும் இப்போட்டியில் முதல் சுற்றில் முன்னிலை வகிக்கும் இரு அணிகள் நாளை (17) நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும். (04)

# பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் ஐ.நா. தீர்மானம் இஸ்ரேல் நிராகரிப்பதாக நெதன்யாகு அறிவிப்பு!



பாலஸ்தீனத்தை முழு உறுப்பு நாடாக அங்கீகரிக்கும் ஐ.நா. தீர்மானத்தை இஸ்ரேல் நிராகரிப்பதாக அந்த நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாலஸ்தீனத்தை ஐ.நா.வின் முழுமையான உறுப்பு நாடாக்க வழிவகுக்கும் ஐ.நா. பொதுச் சபையின் தீர்மானத்தை இஸ்ரேல் நிராகரிக்கிறது.

ஏற்கெனவே எங்கள் மீது தாக்குதல் நடத்திவரும் ஒரு பிரிவினர், அந்தத் தாக்குதலை இன்னும் தீவிரமாக நடத்துவதற்காக ஒரு பயங்கரவாத நாட்டை நிறுவ நாங்கள் அனுமதிக்க முடியாது.

எங்களைத் தற்காத்துக்கொள்வது எங்கள் அடிப்படை உரிமை. அந்த உரிமையை நாங்கள் நிலைநாட்டுவதை ஐ.நா. உள்ளிட்ட எந்த சக்தியாலும் தடுக்க முடியாது, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, பாலஸ்தீனத்தை ஐ.நா. பொதுச் சபையின் முழு உறுப்பினராக்க வேண்டும் என வலியுறுத்தி ஐ.நா. பொதுச் சபையில் கடந்த வாரம் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட பொதுச் சபையில் அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா உள்ளிட்ட 143 நாடுகள் வாக்களித்தன. 25 நாடுகள் வாக்களிப்பைப் புறக்கணித்தன. இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட 9 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன.

மிகப் பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் தீர்மானத்தை ஆதரித்ததால் அது பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டது. (04)



# உத்தேச புதிய மின்சார சட்டத்திற்கு எதிராக பத்து இலட்சம் கையொப்பங்களை சேகரித்தல் ஆரம்பம்

## மின்சார பாவனையாளர் சங்கத்தினால் முன்னெடுப்பு

முன்மொழியப்பட்ட உத்தேச புதிய மின்சார சட்டத்திற்கு எதிராக பத்து இலட்சம் கையொப்பங்களை சேகரிக்கும் நிகழ்வு கடந்த திங்களன்று (13) கொழும்பு கோட்டை ரயில் நிலையம் அருகே ஆரம்பமாகியது. மின்சார பாவனையாளர் சங்கம் இந்த நிகழ்வை முன்னெடுத்து வருகின்றது.

இந்த மனுவை தயாரித்து ஜனாதிபதி மற்றும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மற்றுமொரு கட்டமாக நேற்றும் (14) நுகேகொடை நகரில் கையொப்பங்களை சேகரித்தல் நடைபெற்றதாக மின்சார பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்துள்ளார்.

முன்மொழியப்பட்ட மசோதாவானது மின்சார நுகர்வோரின் உரிமைகளை மீறும் செயல் எனவும், நாட்டின் இறையாண்மைக்கு கேடு விளைவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். தற்போதுள்ள மின்சாரச் சட்டதின்படி செலவின் அடிப்படையிலேயே கட்டணம் அறவிடப்பட்டாலும், உத்தேச புதிய சட்டத்தின்படி நிறுவனங்களுக்கு தம் இஷ்டப்படி லாபம் ஈட்டுவதற்கான வாய்ப்பை அளிப்பதாக உள்ளதுடன், இது மின்சார பாவனையாளர்களை சுரண்டுவதற்கு வழி வகுப்பதாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள மின்சார பாவனையாளர்களுக்கு சொந்தமான சுமார் 14 பில்லியன் ரூபா வைப்பு வட்டி தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து புதிய சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை எனவும், புதிய சட்டத்திற்கு எதிராக எடுக்கக் கூடிய சட்டரீதியிலான சாத்தியக்கூறுகளை தமது சங்கம் ஆராயும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெம-61)

# அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் இரத்த தான நிகழ்வு





அக்கரைப்பற்று இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான நிகழ்வு இன்று (16) இடம்பெற்றது.

"உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" எனும் தொனிப் பொருளின் கீழ், பீடாதிபதி சட்டத்தாணி கே.புண்ணிய மூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது கல்வியியற் கல்லூரியின் 2022-2024 ஆம் பிரிவு ஆசிரிய பயிலுநர்கள், கல்வி, கல்விசாரா உத்தியோகத்தர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் லந்து கொண்டு இரத்த தானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி ஏற்பாடு செய்த இந்த இரத்த தான நிகழ்வு, முழு நாள் நிகழ்வாக இடம் பெற்றிருந்தது.

## 322 'சுவசரிய' அம்பியூலன்ஸ்களில் 56 வாகனங்கள் செயலிழந்துள்ளன

### அரசாங்கம் அசமந்தம் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்




'சுவசரிய' அம்பியூலன்ஸ் சேவையிலுள்ள 322 அம்பியூலன்ஸ் வானங்களில் 56 வாகனங்கள் இயங்காத நிலையில் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் கருத்துருவாக ஆரம்பிக்கப்பட்ட 'சுவசரிய' அம்பியூலன்ஸ் வாகனங்களில் பணியாற்றிய சாரதிகள் மற்றும் அவசர சேவை உத்தியோகத்தர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர் இதன் போது குறிப்பிட்டார்.

இந்த ஆம்புலன்ஸ்களை புதுப்பித்தலில் மற்றும்இதற்கென பணியாளர்களை நியமிப்பதில் அரசாங்கம் அசமந்தமாக இருப்பதனால், இதனை செயலிக்கச் செய்யாமல் இனியேனும் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ரெம-59)






## ஊடக சுதந்திரத்தில் நோர்வேக்கு முதலிடம்!

### இலங்கை 150 ஆவது!!

உலக ஊடக சுதந்திரத்தில் நோர்வே முதலிடத்தை பெற்றுள்ளது. உலக பத்திரிகை சுதந்திர தினத்தை முன்னிட்டு எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பின்தெரிவின்படி ஊடக சுதந்திரத்தை கொண்டுள்ள 180 நாடுகளின் வரிசையில் நோர்வே இவ்வாறு முதல் இடத்தை பெற்றுள்ளது. இந்த பட்டியலில் எரித்திரியா நாடு கடைசி இடத்தில் உள்ளது.

மேலும், டென்மார்க் இரண்டாவது இடத்திலும், ஸ்வீடன் மற்றும் நெதர்லாந்து முறையே மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களிலும் உள்ளன. ஐந்தாவது இடத்தில் பின்லாந்து இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த வரிசையின் படி, மாலைதீவு 106வது இடத்திலும், இலங்கை 150வது இடத்திலும், பாகிஸ்தான் 152வது இடத்திலும், இந்தியா 159வது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரெம-58)

# பூஞ்சை பிடித்துள்ள தானிய வகைகளை உண்பதால் புற்று நோய்க்கு ஆளாகலாம்

## பொது சுகாதார பரிசோதகர் சந்துன் ஹேமந்த தெரிவிப்பு

சந்தையில் வாங்கப்படுகின்ற அல்லது வீட்டில் சேமித்து வைக்கப்பட்டுள்ள அதிகளவில் புற்றுநோயை உண்டாக்கும் பூஞ்சையை கொண்டுள்ள தானியங்கள் மற்றும் மசாலாப் பொருட்களை உண்பதை தவிர்க்க வேண்டும் என பொது சுகாதார பரிசோதகர் ஆர்.எம். சந்துன் ஹேமந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரிசி, மிளகாய், சீரகம், பருப்பு, கொத்தமல்லி, தேங்காய் எண்ணெய் மற்றும் தேங்காய், வேர்க்கடலை, சோளம் , உலர் உணவுகள், தாவர எண்ணெய்கள், சோயாபீன்ஸ் மற்றும்பால்பொருட்கள்உட்பட நாம்அன்றாடம்உண்ணும் பல உணவுகளில் அஃப்லடொக்சின் வகையை சேர்ந்த கடுமையான புற்றுநோயை உண்டாக்கும் பூஞ்சைகள் அடங்கியுள்ளமையினால் இந்த ஆபத்தான நிலை ஏற்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.




அஃப்லடொக்சின்‘ குடும்பத்தைச் சேர்ந்த ‘அஸ்பகில்லஸ் பிளேவஸ்’ மற்றும்’ அஸ்பகில்லஸ் பெராசிட்டிஸஸ்’ ஆகிய இரண்டு வகை பூஞ்சைகளால் அந்தந்த உணவு வகைகளில் மேற்படி தாக்கம் ஏற்படுவதாகவும், அந்த உணவுகளை எவ்வளவு தான் வெய்யிலில் உலர வைத்தாலோ அல்லது குளிர்சாதனப்பெட்டியில்வைத்தாலோ அந்த பூஞ்சைகள் அழிவதில்லை எனவும் தெரிவித்துள்ள சுகாதார பரிசோதகர் ரத்நாயக்க, அஃப்லடொக்சின் வகை பூஞ்சைகள் மரணத்தை ஏற்படுத்தும் என்பதால் மக்கள் கவனமாக இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, இந்த வகை அஃப்லடொக்சின் பூஞ்சையின் காரணமாக, பூஞ்சை உள்ள உணவுகளை ஒருபோதும் சாப்பிடாமல் இருப்பதும், அந்த உணவுகளை குழந்தைகளுக்கு கொடுப்பதையும் தவிர்க்க வேண்டும். இது தவிர, சோளம், அரிசி, பயறு உட்பட ஏனைய தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் உணவுகளிலும் இந்த பூஞ்சை இருக்கலாம், எனவே அவற்றை குழந்தைகளுக்கு கொடுக்கும்போது கவனமாக இருக்க வேண்டும். உணவுப்பொருட்களை நீண்ட காலத்திற்கு சேமித்து வைப்பதாலும் அவை பூஞ்சையாக மாறுவதால் அவற்றில் அஃப்லாடொக்சின் வகை புற்றுநோயை உண்டாக்கும் பூஞ்சைகள் உருவாகலாம் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

(ரெம-62)

# வெளிநாட்டவர்கள் திரும்பிச் செல்லும்போது விமான நிலையத்தில் இலங்கை தேயிலையின் நினைவுப் பரிசொன்றை வழங்க யோசனை

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் திரும்பிச்செல்லும்போது விமான நிலையத்தில் வைத்து இலங்கை தேயிலையை நினைவூட்டும் வகையில் நினைவுப் பரிசொன்றை அவர்களுக்கு வழங்குவதற்கான யோசனையொன்றை விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர முன்வைத்துள்ளார்.

அதற்கமைய, ‘சிலோன் டீ’ எனும் வர்த்தக நாமத்தை உலகளவில் பிரபல்யப்படுத்தும் நோக்கில், இலங்கை தேயிலை அடங்கிய நினைவுப் பரிசு இந்நாட்டிற்கு வரும் ஒவ்வொரு சுற்றுலாப் பயணிகளுக்கும் வழங்கப்பட உள்ளது.

தேயிலை கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்த யோசனையை முன்வைத்தார்.

இக்கலந்துரையாடலில் இலங்கை தேயிலை சபை, சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபை, தேயிலை பெருந்தோட்ட துறையினர், பெருந்தோட்ட சங்க பிரதிநிதிகள் மற்றும் தேயிலை தொழில்துறை பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தேயிலை நினைவு பரிசுப் பொருட்களை வழங்கும் மேற்படி யோசனைக்கு தேயிலை தொழில்துறையினரும் இணக்கம் தெரிவித்துள்ளதுடன், இதற்கான செலவை தேயிலை சபை மற்றும் தனியார் துறையினர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

(ரெம-63)











## கிளிநொச்சியில் கஞ்சி வழங்கல்

யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

இறுதி யுத்தத்தில் உணவு தேவையுடன் வாழ்ந்த மக்களுக்கு முள்ளிவாய்க்கால் பகுதியில் கஞ்சி வழங்கப்பட்டு உயிர் காக்கப்பட்டது.

இதனை நினைவு கூரும் வகையில் வடக்கு கிழக்கில் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (02)

## பெண் கழுத்து நெரித்துக்கொலை சந்தேகத்தில்பேரில் கணவர் கைது!

யாழ்ப்பாணம் தாளையடியில் பெண்ணொருவர்துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு, கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பெண்ணின் கணவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மருதங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுத்துறை வடக்கு தாளையடி பகுதியில் கடந்த 10 ஆம் திகதி பெண் ஒருவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு, கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டார்.

கடற்றொழிலுக்கு சென்று அதிகாலை வீடு திரும்பியபோது, வீட்டின் கழிப்பறைக்கு முன்பாக சந்தேகத்திற்கிடமான முறையில் மனைவி சடலமாகக் கிடந்துள்ளார் என தெரிவித்து, உயிரிழந்த பெண்ணின் கணவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

அவரின் முறைப்பாட்டை அடுத்து, பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்தனர்.

உயிரிழந்த பெண் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டமை பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது.

மூன்று பிள்ளைகளின் தாயான 44 வயதான பெண்ணே அவ்வாறு கொலை செய்யப்பட்டிருந்தார்.

பொலிஸாரின் விசாரணையில் உயிரிழந்த பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் அடிக்கடி முரண்பாடு ஏற்படுவதாகத் தெரியவந்த நிலையில், சந்தேகத்தின் அடிப்படையில் 52 வயதான பெண்ணின் கணவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபரை இன்றையதினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (01)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!